# தமிழச்சி தங்கபாண்டியன்

தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்

நாள் : 20.03.2023

## பேறுகால நீரிழிவு நோயைத் தடுக்க மருத்துவ பரிசோதனை ஆய்வுகள் குறித்து

## திமுக எம்பி தமிழச்சி தங்கபாண்டியன் ஒன்றிய அரசுக்கு கேள்வி

பேறுகால நீரிழிவு நோயைத் தடுக்க கர்ப்பிணிப் பெண்களுக்கு கர்ப்பம் தரித்த எட்டாவது வாரத்தில் மருத்துவ ஆய்வு மேற்கொள்ளப்பட உத்தேச செயல்திட்டம் உள்ளதா என்று ஒன்றிய அரசுக்கு திராவிட முன்னேற்றக் கழக எம்.பி. தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி எழுப்பினார்.

**இதுகுறித்து மக்களவையில் கடந்த வியாழக்கிழமை தமிழச்சி தங்கபாண்டியன் எழுப்பிய கேள்வி விவரம் வருமாறு:**

கர்ப்பம் தரித்த பெண்களுக்கு நீரழிவு நோய் தாக்குதலைக் கண்டறிந்து தடுக்க கர்ப்பம் தரித்த எட்டாவது வாரத்தில் நாடு தழுவிய அளவில் மருத்துவ ஆய்வு மேற்கொள்ள ஒன்றிய மகளிர் மற்றும் குழந்தைகள் நல அமைச்சகத்திற்கு கோரிக்கை ஏதும் வந்துள்ளதா?

அவ்வாறு கோரிக்கை ஏதும் வந்திருந்தால், அத்தகைய ஆய்வுத் திட்டத்தை அல்லது கொள்கையை நாடு தழுவிய அளவில் செயல்படுத்த ஒன்றிய அரசு உத்தேசித்துள்ளதா? அவ்வாறு உத்தேசித்திருந்தால் அதைப் பற்றிய விவரங்களைத் தெரிவிக்க வேண்டும் என்று தமிழச்சி தங்கபாண்டியன் கோரினார்.

**உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் எழுப்பிய கேள்விக்கு ஒன்றிய அரசின் மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஸ்மிருதி இரானி அளித்த பதில் விவரம் வருமாறு**

பேறுகாலப் பெண்களுக்கு உரிய காலத்தில் மேற்கொள்ளப்படும் மருத்துவ சிகிச்சையின் மூலம் நீரிழிவு நோயைத் தடுக்க இயலும். கட்டுப்படுத்தப்படாத நீரிழிவு நோயினால் ஏற்படும் நீண்ட காலம் மற்றும் குறுகிய கால விளைவுகளை இத்தகைய ஆரம்ப கட்ட சிகிச்சை மூலம் கட்டுப்படுத்த முடியும். கர்ப்பிணிப் பெண்களின் கருவின் தன்மையை மேம்படுத்தவும் தாய்மையின் உன்னதத்தை வலுப்படுத்தவும் ஒன்றிய அரசு இரு திட்டங்களை வகுத்தளித்துள்ளது.

2014 ஆம் ஆண்டின் நீரிழிவு நோய் கண்டறிதல் மற்றும் மேலாண்மை தொடர்பான தேசிய வழிகாட்டி நெறிமுறைகள் மற்றும் 2018 ஆம் ஆண்டின் நீரிழிவு நோய் கண்டறிதல் மற்றும் மேலாண்மை தொடர்பான தொழில்நுட்ப செயல்முறை வழிகாட்டிகள் ஆகிய திட்ட வழிகாட்டி நெறிமுறைகளை ஒன்றிய அரசு ஏற்கெனவே வெளியிட்டுள்ளது.

அதன்படி அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் கர்ப்பிணிப் பெண்களுக்கு நீரிழிவு நோய் தாக்குதலைக் கண்டறிந்து தடுப்பதற்கான உரிய செயல் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

******